# *புகழ்ச்சிக்கூட்ட நற்செய்தி*

## 2017 ஐப்பசி மாதம் 02 திகதி முதல் 08 திகதி வரை

**“பேறுபெற்ற தாயை போலாவோம்.”** (புனித மத்தேயு 5:9)

01. ஆரம்ப பாடல் புபுது பாடல இல. 09 “அன்பானவரே…….”

02. புகழ்ச்சிக்கான நோக்கு

- திருப்பாடல் 103: 8-10 வரை தியான நிலையில் வாசிக்கவும். ஒன்றிரண்டு முறை வாசிக்கவும்.
- இது படைப்பாளராம் இறைவன் உங்களுக்குக் காட்டும் அன்பு, வேறு யாருக்குமல்ல உங்களுக்காகவே. இக்கணம் நீங்கள் இருக்கும் நிலைக்கு விழிப்புறுங்கள். உங்கள் உள்ளாந்தரத்தைக் காணுங்கள். அவ்வாறே உங்களை அவருடையவராக்கிக் கொள்கிறார். இன்று இந்நேரம் உங்களுக்கான அழைப்பு, அந்த அன்பினை வெளிப்படுத்திடவேயாகும். அதனை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்காகவே. அவ்வாறு செய்தது உங்கள் மீது கொண்ட அன்பினாலேயே. எனவே உண்மை நிலையின் முன்னே என்னை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாத கணத்தில் உங்களை என்னை இருக்கம் நிலையிலேயே ஏற்றுக் கொண்ட ஆண்டவரை புகழ்வொம்.
- புபுது பாடல் இல. 56 “என்றும் என்னுடன் இனையும்…” பாடலுடன் புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.
-

03. நாளுக்குரிய நற்செய்தி

தேவ தாய் “பேறுபெற்ற அன்னை” கன்னிமரியாள் எனும் வார்த்தைகள் வழியாக அறிமுகப்படுத்துவது தேவ அன்னையை பற்றியே. அந்த வார்த்தைகள் காதுகளை எட்டிய உடனயே எமக்குத் தோன்றும் உருவமானது மிகவும் ஆழமான, அமைதியான, எவ்வித சலனமுமற்ற, மிகவும் தாழ்ச்சியுள்ள ஒருவரயே. அது நாம் ஒவ்வொருவரும் தேவ அன்னை பற்றி எம் மனதிற்குள் வைத்துள்ள விதமே. அது தவறல்ல. இருப்பினும் தேவ தாய் எமது எல்லைக்குட்பட்ட பார்வைக்குள் அடக்கிக் கொள்ளக்கூடிய தாய் அல்ல. பேறுபெற்ற தாய் இவை அனைத்தையும் தாண்டி அதனிலும் மேலாக செல்லும் பூரண வெறுமையாவார்.

- தேவ தாயைப் பார்க்கையில் ஆசைகளில், உரிமைகளில், உலக பெறுமதிகளில், கட்டுக்களில், நின்று வெறுமையாவதை விட தனது வாழ்க்கையிலேயே வெறுமையான ஒருவராவார். “இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீா் அவருக்கு இயேசு எனும் பெயரிடுவீர்.” (புனித லூக்கா 1: 31) இந்த கட்டளையை எடுத்து வந்த தேவதூதன் அதனை அறிவிக்கும் அக் கணத்திலேயே, அவர் இறைமகன் தனது வயிற்றில் உருவாகிட இடமளித்துவிட்டார். அந்ததருனம் அவர் திருமனமாகாத இளம் பெண். அவ்வாறான பெண் ஒருவர் கருத்தரிப்பது கல்லால் அடித்துக் கொல்லும் மரணத்திற்குரிய குற்றமாகும். “உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” (புனித லூக்கா 1:38) என்று கூறியது மரண தன்டனை என்பது தெரியாமலல்ல.

- இறை விருப்பத்தை தன வாழ்விலேயே நிறைவேற்றுவதற்கு, ஏற்றுக்கொள்வதற்கு முடியுமான விதத்திலான வெறுமை அவரிடம் இருந்தது. ‘‘அமைதி கொண்டு நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள்’’ (திருப்பாடல் 46.10) இப்பாடல் அவரது உதடுகளில் முடிவானதில் எவ்வித சந்தேகமுமில்லை பெரியதொரு உள்ளதந்தர அமைதியினூடாக உரிமைகளினின்று, தனது சுய தன்மையினின்று, ஆசைகளினின்று, கட்டுக்களினின்று விடுதலையாகி இருந்தார்.
- தேவ தாயின் உள்ளாந்தர வெறுமையை நீங்கள் காணும் விதத்தினை சிறு குழுக்ககளில் பகிர்ந்து கொள்ளவும்.

04. எமது பக்கம்.

- தேவ தாயை போலாவதற்கு எமது உள்ளாந்திரத்தினின்று வெறுமையாக்க வேண்டியவற்றறைக் காணுவோம். உணமையான நிலையை அரிந்து கொள்வோம்.
- உண்மையாகவே வெறுமை நிலையிலுள்ள தேவ தாயின் வாழ்க்கைக்கு சிறு பொழுது உள்ளாகிட, இக் கட்டுக்களிலிருந்து விலகிட எம்மால் முடியுமா?
- நாம் இருக்கும் நிலைகளினின்று விடுபட்டிட ஆசைப்படுவோம். அதற்கான வல்லமையை வேண்டி செபிப்போம். எம்மைப் போலவே மற்றவர்களும் சிறைபட்டிருக்க முடியுமாதலால் அவர்களுக்காக நடுநிலைவகித்து செபிப்போம்.

05. இறுதி புகழ்ச்சி புபுது பாடல இல. 100 ‘‘மாசில்லாமரி கன்னிகை போல்…..’’